பணியமைப்பு – ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் – மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் – அயற்பணியில் பொறியாளர்களை பணியிலமர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.4) துறை

அரசாணை (ப) எண்.520 நாள் 24.10.2007

படிக்க

1. அரசாணை (2ப) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 26.6.2007.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 கடித ந.க.எண். 12550/2006/ மாநஅ4 நாள் 6.9.2007.
3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 கடித ந.க.எண்.12550/2006/ மாநஅ4 நாள் 6.9.2007.

-----

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஜவஉறர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்திற்காக மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு கீழ்க்காணும் பொறியாளர் பணியிடங்கள் இரண்டாண்டுகளுக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | பதவியின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மதுரை மாநகராட்சி | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 |
| 2. | செயற்பொறியாளர் | 2 | 2 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 4 | 4 |
| 4. | உதவிப்பொறியாளர்/இளநிலை பொறியாளர் | 8 | 8 |
| 5. | வரைவு அலுவலர் | 4 | 4 |
| 6. | தொழில்நுட்ப உதவியாளர் | 16 | 16 |

2. தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள்,1996–ல் விதி 6–ன்படி, இவ்விதிகளிலுள்ள பணியிடங்களுக்கு பதவியுயர்வு தெரிவு முறைப்படி மேற்கொள்ள வேண்டும். இப்பணியிடங்களுக்கு மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத நிலையில் மட்டுமே அயற்பணியில் பணியிலமர்த்தப்பட வேண்டும். மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாததால் கீழ்க்காணும் பணியிடங்களை நகராட்சி பொறியியல் பணியிலிருந்து அல்லது வேறு பணியிலிருந்து பணியாளர்களை கொண்டு

நிரப்புமாறு அம்மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் கேட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்:

| வரிசை எண். | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மதுரை மாநகராட்சி | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 1 | 1 |
| 2. | செயற்பொறியாளர் | 1 | 1 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 2 | 2 |
| 4. | உதவிப்பொறியாளர்/ இளநிலை பொறியாளர் | 8 | 8 |

இதற்கேற்ப, கீழ்க்காணும் பணி மாறுதல்களை அயற்பணி அடிப்படையில் மேற்கொள்ளலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:

| வரிசை எண் | பொறியாளரின் பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | தற்போது பணிபுரியும் இடம் | அயற்பணி அடிப்படையில் பணியிலமர்த்தப்பட வேண்டிய மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | கே.பூபதி, மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் | திருப்பூர் | கோயம்புத்தூர் |
| 2. | என். கமலநாதன், உதவி செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம். | திருப்பூர் | கோயம்புத்தூர் |
| 3. | எம்.வி.டி. தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர் | திருப்பூர் நகராட்சி | கோயம்புத்தூர். |
| 4. | ஆர். ரகுபதி, இளநிலை பொறியாளர் | பொள்ளாச்சி நகராட்சி | கோயம்புத்தூர் |
| 5. | பி.உமாதேவி, உதவிப்பொறியாளர் | ஆனைமலை பேரூராட்சி, கோயம்புத்தூர் | கோயம்புத்தூர். |
| 6. | சிபிசக்கரவர்த்தி, உதவிப்பொறியாளர் | கிருஷ்ணகிரி நகராட்சி | கோயம்புத்தூர் |
| 7. | ஏ.ரங்கநாதன், உதவிப்பொறியாளர் | காஞ்சிபுரம் நகராட்சி | கோயம்புத்தூர் |
| 8. | ஏ.டி. நரசிம்மன், உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை | பொதுப்பணித் துறை, தேவகோட்டை | மதுரை |

3. நகராட்சி நிர்வாக ஆணையர் அனுப்பிய மேலே மூன்றில் படிக்கப்பட்ட மற்றொரு செயற்குறிப்பில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட மற்ற

பொறியாளர் பணியிடங்களை அயற்பணியில் பூர்த்தி செய்ய மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர்களிடமிருந்து செயற்குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவித்து, ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தினை விரைந்து முடிக்கும் பொருட்டு, அயற்பணியில் இப்பணியிடங்களை பூர்த்தி செய்யும் அதிகாரத்தினை (delegation of power) நகராட்சி நிர்வாக ஆணையருக்கே அளிக்குமாறு கேட்டுள்ளார். இது குறித்து பின்னர் பின்னேற்பு கோரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:-

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை அயற்பணியில் பூர்த்தி செய்வது குறித்து திரு வீ. வீரராகவன் மற்றும் மூவர் தொடுத்த வழக்கு WP No.18662/2007ல் உள்ள MP No.2/2007ல் சென்னை உயர்நீதிமன்றம் தனது 29.8.2007 நாளிட்ட ஆணையில் நிலையான தடை ஏற்படுத்தி உள்ளதால் உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை அயற்பணி அடிப்படையில் நிரப்பக்கூடாது என நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆ) கண்காணிப்பு பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பணியிடங்கள் வகுப்பு–1–ன்கீழ் வருவதால் இவற்றிற்கு நியமன அதிகாரி அரசு என்பதாலும், அவற்றை அரசுதான் பூர்த்தி செய்யும். நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படமாட்டாது.

(இ) ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளில் உள்ள பொறியியல் பணியிடங்களை பூர்த்தி செய்யும்பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ள கீழ்க்காணும் அயற்பணி அடிப்படையிலான பணிமாறுதல்கள் மற்றும் நியமனங்களை ஏற்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது:

| வரிசை எண் | பொறியாளரின் பெயர் மற்றும் பதவி<br>திரு/திருமதி | தற்போது பணிபுரியும் இடம் | அயற்பணி அடிப்படையில் பணியிலமர்த்தப்பட வேண்டிய மாநகராட்சி |
|---|---|---|---|
| 1. | கே. பூபதி,<br>மண்டல செயற்பொறியாளர்,<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் | திருப்பூர் | கோயம்புத்தூர் |
| 2. | ஆர். ரகுபதி,<br>இளநிலை பொறியாளர் | பொள்ளாச்சி நகராட்சி | கோயம்புத்தூர் |
| 3. | பி. உமாதேவி,<br>உதவிப்பொறியாளர் | ஆனமலை பேரூராட்சி | கோயம்புத்தூர். |
| 4. | சிபிசக்கரவர்த்தி,<br>உதவிப்பொறியாளர் | கிருஷ்ணகிரி நகராட்சி | கோயம்புத்தூர் |
| 5. | ஏ.ரங்கநாதன், உதவிப்பொறியாளர் | காஞ்சிபுரம் நகராட்சி | கோயம்புத்தூர் |
| 6. | ஏ.டி. நரசிம்மன்,<br>உதவி செயற்பொறியாளர்,<br>பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை, தேவகோட்டை | மதுரை |

(ஈ) மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லையெனில், ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டு மீதமுள்ள பொறியியல் பணியிடங்களை அயற்பணி அடிப்படையில் பூர்த்தி செய்ய உடன் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, குறளகம், சென்னை–108.

நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந.2/ந.ப.1/ந.ப.3) துறை,
சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.